كَاَنَّهُمْ حُمُرٌ مُّسْتَنْفِرَةٌ ﴿٥٠﴾ فَرَّتْ مِنْ قَسْوَرَةٍ ﴿٥١﴾ بَلْ يُرِيْدُ
كُلُّ امْرِئٍ مِّنْهُمْ اَنْ يُّؤْتٰى صُحُفًا مُّنَشَّرَةً ﴿٥٢﴾ كَلَّا ۭ بَلْ لَّا
يَخَافُوْنَ الْاٰخِرَةَ ﴿٥٣﴾ كَلَّآ اِنَّهٗ تَذْكِرَةٌ ﴿٥٤﴾ فَمَنْ شَآءَ
ذَكَرَهٗ ﴿٥٥﴾ وَمَا يَذْكُرُوْنَ اِلَّآ اَنْ يَّشَآءَ اللّٰهُ ۭ هُوَ اَهْلُ
التَّقْوٰى وَاَهْلُ الْمَغْفِرَةِ ﴿٥٦﴾ ع ٢

## سُوْرَةُ الْقِيٰمَةِ مَكِّيَّةٌ وَّهِيَ اَرْبَعُوْنَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

لَآ اُقْسِمُ بِيَوْمِ الْقِيٰمَةِ ﴿١﴾ وَلَآ اُقْسِمُ بِالنَّفْسِ اللَّوَّامَةِ ﴿٢﴾
اَيَحْسَبُ الْاِنْسَانُ اَلَّنْ نَّجْمَعَ عِظَامَهٗ ﴿٣﴾ بَلٰى قٰدِرِيْنَ
عَلٰٓى اَنْ نُّسَوِّيَ بَنَانَهٗ ﴿٤﴾ بَلْ يُرِيْدُ الْاِنْسَانُ لِيَفْجُرَ
اَمَامَهٗ ﴿٥﴾ يَسْـَٔلُ اَيَّانَ يَوْمُ الْقِيٰمَةِ ﴿٦﴾ فَاِذَا بَرِقَ
الْبَصَرُ ﴿٧﴾ وَخَسَفَ الْقَمَرُ ﴿٨﴾ وَجُمِعَ الشَّمْسُ وَالْقَمَرُ ﴿٩﴾
يَقُوْلُ الْاِنْسَانُ يَوْمَىِٕذٍ اَيْنَ الْمَفَرُّ ﴿١٠﴾ كَلَّا لَا وَزَرَ ﴿١١﴾ اِلٰى
رَبِّكَ يَوْمَىِٕذِ اِۨلْمُسْتَقَرُّ ﴿١٢﴾ يُنَبَّؤُا الْاِنْسَانُ يَوْمَىِٕذٍۢ
بِمَا قَدَّمَ وَاَخَّرَ ﴿١٣﴾ بَلِ الْاِنْسَانُ عَلٰى نَفْسِهٖ بَصِيْرَةٌ ﴿١٤﴾

50. அவர்கள் வெருண்டோடுகின்ற(காட்டுக்)கழுதைகளைப் போல்(இருக்கின்றனர்!)

51. (காட்டுக்கழுதைகளான) அவை சிங்கத்தை விட்டும் வெருண்டோடின.

52. மாறாக, அவர்களில் ஒவ்வொரு மனிதனும், விரிக்கப்பட்ட ஆகமங்கள் (தனக்கும்) கொடுக்கப்படவேண்டும் என நாடுகிறான்.

53. (அது நடக்கப்போவது) இல்லை! மாறாக, மறுமையைப்பற்றி அவர்கள் பயப்படுவதில்லை.
54. நிச்சயமாக இது நல்லுபதேசமாகும்.

55. (உபதேசம் பெற) யார் நாடுகிறாரோ அவர் இதனை நினைவில் வைத்து(உபதேசம் பெற்று)க் கொள்ளவும்.

56. இன்னும், அல்லாஹ் நாடினாலன்றி அவர்கள் நல்லுபதேசம் பெற மாட்டார்கள்; அவனேபயப்படுவதற்குரியவனும்,(விசுவாசிகளை)மன்னிப்பதற்குரியவனும்ஆவான்.

---

அத்தியாயம் : 75

## அல்கியாமா _ மறுமை நாள்

வசனங்கள் : 40 மக்கீ ருகூஃகள் : 2

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. மறுமை நாளைக்கொண்டு நான் சத்தியம் செய்கிறேன்.
2. (வழிபாட்டில் மனிதன் குறைவு செய்துவிட்டதைப்பற்றி) மிக நிந்தித்துக் கொண்டிருக்கும் ஆன்மாவைக் கொண்டும் நான் சத்தியம் செய்கிறேன்.
3. மனிதன் (இறப்பெய்தி, மண்ணோடு மண்ணாக மக்கிப்போன பின்னர்) அவனுடைய எலும்புகளை நாம் ஒன்று சேர்க்கவேமாட்டோம் என்று எண்ணுகின்றானா?
4. ஆம்! அவனுடைய விரல்களின் நுனிகளை (_முன்பிருந்தது போல் இணைத்துச் சரிப்படுத்திச் செவ்வையாக்க நாம் ஆற்றலுடையோராக இருக்கிறோம்.
5. மாறாக, மனிதன் தன் எதிர்காலத்திலும் (பாவத்திலிருந்து விலகிவிடாது) பாவம் செய்யவே நாடுகிறான்.
6. "மறுமைநாள் எப்பொழுது(வரும்)?" என (அதிசயமாக) அவன் கேட்கிறான்.
7. (அந்நாளின் அமளிகளைக்கண்டு திடுக்கிட்டு) பார்வை நிலைகுத்திவிட்டால்;
8. சந்திரனும் ஒளி இழந்து(விடுமானால்);
9. சூரியனும், சந்திரனும் ஒன்றாக்கப்பட்டு விடும்(ஆனால்);
10. அந்நாளில் "எங்கு விரண்டோடுவது" என மனிதன் கூறுவான்.
11. இல்லை! தப்ப இடமில்லை.
12. அந்நாளில் (அனைவரின்) தங்குமிடம் உம் இரட்சகனிடத்திலாகும்.
13. மனிதன் _ அவன் முற்படுத்திவைத்ததையும், அவன் பிற்படுத்திவைத்ததையும் (பற்றி ) அந்நாளில் அறிவிக்கப்படுவான்.
14. ஏன், மனிதன் தன் மீது பார்வையுடையவனாக(தன் செயல்களுக்குச் சாட்சியாக) இருப்பான்.

وَّلَوْ اَلْقٰى مَعَاذِيْرَهٗ ﴿١٥﴾ لَا تُحَرِّكْ بِهٖ لِسَانَكَ لِتَعْجَلَ
بِهٖ ﴿١٦﴾ اِنَّ عَلَيْنَا جَمْعَهٗ وَقُرْاٰنَهٗ ﴿١٧﴾ فَاِذَا قَرَاْنٰهُ فَاتَّبِعْ
قُرْاٰنَهٗ ﴿١٨﴾ ثُمَّ اِنَّ عَلَيْنَا بَيَانَهٗ ﴿١٩﴾ كَلَّا بَلْ تُحِبُّوْنَ
الْعَاجِلَةَ ﴿٢٠﴾ وَتَذَرُوْنَ الْاٰخِرَةَ ﴿٢١﴾ وُجُوْهٌ يَّوْمَئِذٍ نَّاضِرَةٌ ﴿٢٢﴾
اِلٰى رَبِّهَا نَاظِرَةٌ ﴿٢٣﴾ وَوُجُوْهٌ يَّوْمَئِذٍۢ بَاسِرَةٌ ﴿٢٤﴾ تَظُنُّ
اَنْ يُّفْعَلَ بِهَا فَاقِرَةٌ ﴿٢٥﴾ كَلَّآ اِذَا بَلَغَتِ التَّرَاقِيَ ﴿٢٦﴾
وَقِيْلَ مَنْ سكتة رَاقٍ ﴿٢٧﴾ وَّظَنَّ اَنَّهُ الْفِرَاقُ ﴿٢٨﴾ وَالْتَفَّتِ
السَّاقُ بِالسَّاقِ ﴿٢٩﴾ اِلٰى رَبِّكَ يَوْمَئِذِ نِ الْمَسَاقُ ﴿٣٠﴾ ع ١ ١٧
فَلَا صَدَّقَ وَلَا صَلّٰى ﴿٣١﴾ وَلٰكِنْ كَذَّبَ وَتَوَلّٰى ﴿٣٢﴾
ثُمَّ ذَهَبَ اِلٰٓى اَهْلِهٖ يَتَمَطّٰى ﴿٣٣﴾ اَوْلٰى لَكَ فَاَوْلٰى ﴿٣٤﴾
ثُمَّ اَوْلٰى لَكَ فَاَوْلٰى ﴿٣٥﴾ اَيَحْسَبُ الْاِنْسَانُ اَنْ
يُّتْرَكَ سُدًى ﴿٣٦﴾ اَلَمْ يَكُ نُطْفَةً مِّنْ مَّنِيٍّ يُّمْنٰى ﴿٣٧﴾
ثُمَّ كَانَ عَلَقَةً فَخَلَقَ فَسَوّٰى ﴿٣٨﴾ فَجَعَلَ مِنْهُ الزَّوْجَيْنِ
الذَّكَرَ وَالْاُنْثٰى ﴿٣٩﴾ اَلَيْسَ ذٰلِكَ بِقٰدِرٍ عَلٰٓى اَنْ
يُّحْیِۦَ الْمَوْتٰى ﴿٤٠﴾ ع ٢ ١٨

15. (ஆகவே, தன் குற்றங்களை மறைக்க) அவன் தன் புகல்களைப் போட்ட போதிலும் சரியே (அவை அங்கீகரிக்கப்படமாட்டா).

16. (நபியே! வஹீமூலம் அறிவிக்கப்படுபவை தவறிவிடுமோ என பயந்து) அதற்காக நீர் அவசரப்பட்டு உம் நாவை அசைக்காதீர்.

17. (உம் உள்ளத்தில்) அதனை ஒன்று சேர்ப்பதும், (உமது நாவால்) அதனை ஓதச்செய்வதும் நிச்சயமாக நம்மீதா(ன கடமையா)கும்.

18. ஆகவே, (ஜிப்ரீல் மூலம்) அதனைநாம் (உமக்கு) ஓதுவோமாயின், (ஓதப்படும்) அதன் ஓதுதலை நீர் பின் தொடர்(ந்து ஓது)வீராக.

19. பின்னர், நிச்சயமாக அதனைத்தெளிவு செய்வதும் நம்மீதா(னகடமையா)கும்.

20. ஏன் இல்லை! பின்னர் (மனிதர்களே!) நீங்கள் அவசரமானதை (இம்மையை) விரும்புகின்றீர்கள்.

21. அன்றியும், மறுமையை நீங்கள் விட்டுவிடுகின்றீர்கள்.

22. அந்நாளில் சில(ருடைய) முகங்கள் (சந்தோஷத்தால்) மலர்ச்சியானவையாக இருக்கும்.

23. (அவை) தங்கள் இரட்சகனை நோக்கிக்கொண்டிருக்கும்.

24. இன்னும், அந்நாளில் சில(ருடைய) முகங்கள், (துக்கத்தால் கறுத்து) சோகமானவையாக இருக்கும்.

25. முதுகுகளை முறித்துவிடும் பேராபத்து தங்களுக்கு உண்டாக்கப்படும் என்று அவை உறுதி கொண்டிருக்கும்.

26. (மறுமைநாள் வெகுதூரமென நீங்கள் எண்ணிக்கொண்டிருக்கிறீர்களே) அவ்வாறல்ல! (இதோ அதன் தொடக்கமாக மரணவேளையில் அவனது உயிர்) தொண்டைக்குழியை அடைந்துவிட்டால்,

27. "மந்திரிப்பவன் எவன்?" என்றும் கேட்கப்படுகிறது.

28. (ஆனால்) அவனோ நிச்சயமாக இது(தான் தன்னுடைய) பிரிவு (க்குரிய காலம்) என்பதை (உறுதியாக) அறிந்து கொள்கின்றான்.

29. இன்னும் (அவனுடைய) கெண்டைக்கால், கெண்டைக் காலோடு பின்னிக்கொள்ளும்.

30. அந்நாளில் இழுத்துச் செல்லப்படுதல் உமதிரட்சகன்பால் இருக்கிறது.

31. (அல்லாஹ்வுடைய வேதத்தையும், அவனின் தூதரையும்) அவன் உண்மையாக்கவில்லை; அவன் (இரட்சகனைத்) தொழவுமில்லை.

32. எனினும் அவன் பொய்யாக்கி புறக்கணித்தும் விட்டான்.

33. பின்னர், தன் குடும்பத்தாரிடம் அகம்பாவம் கொண்டவனாகச் சென்று விட்டான்.

34. (மனிதனே!) உன்னை அழிக்கக்கூடியது நெருங்கிவிட்டது! பின்னரும் அழிக்கக்கூடியது நெருங்கி விட்டது.

35. பின்னும் உன்னை அழிக்கக்கூடியது நெருங்கி விட்டது! அப்பாலும் உன்னை அழிக்கக்கூடியது நெருங்கி விட்டது.

36. (எத்தகைய கேள்விகணக்கும் கேட்கப்படாமல்) வீணாக விடப்பட்டு விடுவான் என்று மனிதன் எண்ணிக்கொண்டானா?

37. (கர்ப்பத்தில்) செலுத்தப்படும் ஓர் இந்திரியத் துளியாக அவன் இருக்கவில்லையா?

38. பின்னர் அவன் (அட்டைப்பூச்சி போன்று ஒட்டிக்கொண்டிருக்கும்) இரத்தக் கட்டியாக இருந்தான்; பின்னர் (அவனை) அவன் படைத்து (ப்பின்னர்) செவ்வையாக்கி வைத்தான்.

39. பின்னர் (மனிதனாகிய) அவனிலிருந்து ஆண், பெண் என்ற இரு வகையை அவன் ஆக்கினான்.

40. (இவ்வாறு செய்த) அவன் மரணித்தோரை உயிர்ப்பிக்க ஆற்றல் உடையவனாக இல்லையா?